பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**17 11 2025** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கத்தார் நாட்டின் தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

**2.** பிஹாரில் சட்டப்பேரவைத் தேர்தல் நிறைவடைந்ததையடுத்து, தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

**3.** தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய கஷ்மீரைச் சேர்ந்த முக்கிய நபரை தேசிய புலனாய்வு அமைப்பினர் கைது செய்துள்ளனர்.

**4.** இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பங்களாதேஷ் மீனவர்கள் **29** பேர் கடலோரக் காவல்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**5.** **GT** ஓபன் வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் குஷால் தலால் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கத்தார் நாட்டின் அமீர் மற்றும் பிரதமரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தோஹாவில், கத்தார் அமீர் திரு. தமீம் பின் ஹமத்-துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று அந்நாட்டு பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான திரு. அல் தானி-யையும் சந்தித்துப் பேசியதாக அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது எரிசக்தி, வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட துறைகளில், இந்தியா-கத்தார் இடையிலான நீடித்த ஒத்துழைப்பு குறித்து விவாதித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு நட்புறவை வலுப்படுத்த இந்தியா உறுதி பூண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பல்வேறு துறைகளில், இந்தியாவும், கத்தாரும் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதுடன், புதிய துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து, கத்தார் அமீர் தெரிவித்த கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிஹாரில் சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் நிறைவடைந்ததையடுத்து, அம்மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட **243** உறுப்பினர்களின் பெயர் அடங்கிய பட்டியலை அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. வினோத் சிங் கஞ்சியால், ஆளுநர் திரு. ஆரிஃப் முகமது கானிடம் நேற்று ஒப்படைத்தார்.

இதேபோன்று இடைத்தேர்தல் நடைபெற்ற மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலும் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தில்லி செங்கோட்டை கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக, அந்த காரின் உரிமையாளரான கஷ்மீரைச் சேர்ந்த அமீர் ரஷீத் அலி என்பவரை, தேசிய புலனாய்வு அமைப்பினர் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கான சதித் திட்டத்தை தீட்டியதில், குண்டுவெடிப்பு ஏற்பட்ட காரை ஓட்டிவந்த உமர் நபியுடன் சேர்ந்து, அமீர் ரஷீத்தும் சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவரிடமிருந்து, உயிரிழந்த உமர் நபிக்குச் சொந்தமான மற்றொரு வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக, குண்டுவெடிப்பில் காயமடைந்த 25 பேர் உட்பட, இதுவரை 73 பேரிடம், தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

<<<<>>>>

கேரளாவில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான படிவங்கள் இதுவரை 2 கோடியே 63 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்களுக்கு வினியோகிக்கப்பட்டிருப்பதாக, அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ரத்தன் கெல்கர் கூறியுள்ளார்.

இது மொத்த வாக்காளர்களில் 94 புள்ளி ஐந்து இரண்டு சதவீதம் என்றும் அவர் கூறியுள்ளார்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தாங்கள் வினியோகித்த படிவங்கள் குறித்த முபமையான விவரங்களை பதிவேற்றம் செய்யும்போது, இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குவங்கம், கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட **12** மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், தேர்தல் ஆணையத்தால், இம்மாதம் **4**-ந் தேதி முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<<<<>>>>

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பங்களாதேஷ் மீனவர்கள் **29** பேர் கடலோரக் காவல்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொல்கத்தா அருகே வங்கக் கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய கடலோர காவல் படையினர், சந்தேகத்திற்கிடாமன படகு ஒன்று வந்துகொண்டிருப்பதை அறிந்து அந்தப் படகை சுற்றிவளைத்து விசாரித்தபோது அவர்கள் பங்களாதேஷில் இருந்து சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இந்திய எல்லைக்குள் நுழைந்தது தெரியவந்தது.

இதையடுத்து அந்தப் படகுடன் மீனவர்களைக் கரைக்கு அழைத்து வந்த கடலோர காவல் படையினர் பின்னர் அவர்களை கொல்கத்தா காவல்துறையினரிடம் ஒப்படைத்ததாக கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

கடற்படையின், முதலாவது நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பலான 'மாஹே' இம்மாதம் 24-ந் தேதி, நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளதாக, இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

80 சதவீத அளவிற்கு உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல், போர்க்கப்பல்களை வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தில், இந்தியாவின் வலிமையை எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரிப்படைகளின் நீர்மூழ்கி கப்பல்களைக் கண்டறிந்து அவற்றைத் தாக்குவதுடன், கடலோர ரோந்துப் பணிக்கும், மாஹே கப்பல் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்றும் கடற்படை கூறியுள்ளது.

அத்துடன், கடற்படைக் கப்பல் கட்டுமானத்தில், சுயசார்பை ஊக்குவிப்பதாக இக்கப்பல் இருக்கும் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பஞ்சாபைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் கர்தார் சிங் நினைவாக, அவரது சொந்த கிராமத்தில், சுமார் 45 கோடி ரூபாய்

மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று, அம்மாநில முதலமைச்சர் திரு.பகவந்த் சிங் மான் தெரிவித்துள்ளார்.

கர்தார் சிங்கின் நினைவு தினத்தையொட்டி, சாராபா கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தக் கிராமம், முன்மாதிரி கிராமமாக, மேம்படுத்தப்படும் என்றார்.

முன்னதாக, கர்தார் சிங் மற்றும் அவருடன் தூக்கிலிடப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, முதலமைச்சர் திரு.பகவந்த் மான் மரியாதை செலுத்தினார்.

<<<<>>>>

மகரவிளக்கு - மண்டல பூஜைகளையொட்டி, கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்பட்டது.

நேற்று மாலை நடை திறக்கப்பட்டதும், சபரிமலை மற்றும் மாளிகாபுரம் கோவில்களின் புதிய மேல்சாந்திகள் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இதையடுத்து, வழக்கமான பூஜைகள், மலையாள மாதமான விருச்சிக மாதத்தின் முதல் நாளான இன்று முறைப்படி தொடங்குகிறது.

இரண்டு மாத கால சபரிமலை சீசனின்போது, மண்டல பூஜை அடுத்த மாதம் 27-ந் தேதியும், மகரவிளக்கு தரிசனம் ஜனவரி 14-ந் தேதியும் நடைபெற உள்ளன.

இந்த காலகட்டத்தில், தினந்தோறும் 90 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று சபரிமலை கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 70ஆயிரம் பேர் ஆன்லைன் புக்கிங் மூலமாகவும், 20 ஆயிரம் பேர் **Spot Booking** முறையிலும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வெளிநாடுகளில் தஞ்சமடைய சென்ற புலம்பெயர்ந்தோரின் படகுகள், லிபியா கடற்பகுதியில் கவிழ்ந்ததில், நான்கு பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் **Al-Khums** நகர கடற்பகுதியையொட்டி கவிழ்ந்த இந்த இரண்டு படகுகளில், ஒன்றில் பங்களாதேஷைச் சேர்ந்த 26 பேரும், மற்றொரு படகில் எட்டு குழந்தைகள் உட்பட 69 பேரும் இருந்ததாக, லிபியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2011-ம் ஆண்டு லிபியா அதிபர் கடாஃபி, ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பிறகு, உள்நாட்டுக் கிளர்ச்சி மற்றும்

வறுமையால் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள், பிழைப்பு தேடி, லிபியா வழியாக, ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வது அதிகரித்துள்ளது.

<<<<>>>>

போர்ச்சுகல் நாட்டைத் தாக்கிய **Claudia** சூறாவளியில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்தனர். **28** பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் கடுமையாக காயமடைந்த இருவர், மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக, போர்ச்சுகல் அரசின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இந்த சூறாவளி காரணமாக, அந்நாட்டின் **ManMouth** நகரில், ஆற்றங்கரையோரத்தில் உடைப்பு ஏற்பட்டு, வேல்ஸ் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதில், ஏராளமான வீடுகள், தொழிற்சாலைகளில் தண்ணீர் புகுந்திருப்பதுடன், போக்குவரத்து மற்றும் எரிசக்திக் கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

மகராஷ்டிர மாநிலத்தின் விதர்பா மற்றும் மத்தியப் பகுதியில் அடுத்த இரு நாட்களுக்கு கடும் குளிர் வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த **24** மணி நேரத்தில் மராத்வாடா மற்றும் விதர்பா பகுதிகளில் வெப்பநிலை சராசரியை விட குறைவாக பதிவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாசிக் மாவட்டத்தில் நேற்று **10** டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை வீழ்ச்சியடைந்ததாக அந்த மையம் கூறியுள்ளது.

இதேபோன்று சத்தீஸ்கட், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களிலும் குளிர் காற்று நிலவக்கூடும் என்று வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஆந்திரா, கேரளா மற்றும் மாஹே பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

**GT** ஓபன் வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் குஷால் தலால் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

லக்ஸம்பர்கில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் அமெரிக்காவின் **Stephen Hansen**-ஐ வீழ்த்தி பட்டம் வென்றார்.

இப்போட்டியின் **21** வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் கணேஷ் மணிரத்னம் வெண்கலப் பதக்கம் வென்றார்.

---------------

உலகக்கோப்பை செஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி இன்று சீனாவின் **Wei Yi**-ஐ எதிர்கொள்கிறார்.

இந்தப் போட்டி கோவாவின் பனாஜியில் நடைபெற உள்ளது.

**<<<<The End>>>>**